1989 நவம்பர் 1]

(ஊ) கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: இச்சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

5. (ii) சட்ட முன்வடிவுகள் (ஆய்வு).

(அ) எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தை பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் கொடுத்துள்ளார். அவர் தீர்மானத்தை மொழிவார்.

***பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்:

"25—7—1989 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித் துள்ள 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/1989) இப்பேரவை நிராகரிக்கின்றது."

தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.